திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

# திரித்துவச் சுடர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

ஜனவரி 2023

THIRITHUVASUDAR



கிறிஸ்துமஸ் விழாவினை சிறப்பிக்கும் வகையில் நமது பங்குத் தந்தையர்கள் பரிசுப்பொருட்களை வழங்கி மகிழ்ந்தனர்.

## பங்கின் இலக்கு

### PARISH VISION STATEMENT

தூய தமத்திரித்துவ பங்கு மக்களாகிய நாங்கள் இயேசுவின் சீடர்களாக, அருள் வாழ்வின் குழுமமாக, திருவழிபாடு, அருட்பணி, அனைவரையும் உள்ளடக்கிய பணிகளின் வழியாக இயேசுவின் கனவான இறையாட்சியை இம்மண்ணில் கட்டியெழுப்ப அழைக்கப்பட்டுள்ளோம்.

WE THE PEOPLE OF HOLY TRINITY PARISH AS A COMMUNITY OF DISCIPLES OF JESUS CHRIST ARE CALLED TO BUILD HERE ON EARTH THE KINGDOM OF GOD, THE DREAM OF JESUS CHRIST THROUGH LITURGY AND INCLUSIVE PASTORAL MINISTRIES.

## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



திரு அவையில் பன்முகத் தன்மை எனும் கொடைக்காக கிறித்தவக் குழுமத்துக்குள் இருக்கும் பல்வேறுப்பட்ட தனிவரங்களின் கொடையை கண்டுணரவும், கத்தோலிக்க திரு அவையில் இருக்கும் பல்வேறு மரபுகள் மற்றும் சடங்குகளின் செழுமையைக் கண்டுபிடிக்கவும் நமக்கு தூய ஆவியார் உதவிட நாம் மன்றாடுவோம்.

We pray that the Holy Spirit may help us to recognise the gift of different charisms within the Christian Community and to discover the richness of different traditions and rituals in the Catholic Church.

## பங்குத் தந்தையின் செய்தி

தூய தமத்திரித்துவத்தின் இறைமக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பு ஆசீரும், வாழ்த்துகளும். டிசம்பர் மாதத்தில் ஆண்டவருடைய பிறப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடினோம். பெத்லேகத்தில் பிறந்த பாலன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக. இந்த வேளையில் பாலஸ்தீனம் மற்றும் இஸ்ரயேல் நாடுகளுக்கிடையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற போரில் இறந்தவர்களுக்காகவும் இதனால் பாதிக்கப்பட்ட அனைவருக்காகவும் மன்றாடுவோம். சமாதானத்தின் கடவுள் இவர்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக. நம்மையும் இறைவன் மிக்ஜம் புயலிலிருந்து காப்பாற்றியிருப்பதற்காக நன்றி கூறுவோம். இறைவன் நம் அனைவருக்கும் 2024 என்கிற புதிய ஆண்டை தந்துள்ளார். இதை நன்றி உணர்வோடு நாம் பெற்றுக்கொள்வோம். இணைச்சட்டம் 7: 13 ல் ஆண்டவர் உங்களிடம் அன்பு கூர்வார். உங்களுக்குத் தரப்படுமென்று உங்கள் மூதாதையருக்கு அவர் ஆணையிட்டு வாக்களித்த நாட்டில் உங்களை பெருகச்செய்வார். உங்கள் கருவின் கனிகளும், தானியம், திராட்சை இரசம், எண்ணெய் ஆகிய உங்கள் நிலத்தின் விளைவுகளும், உங்கள் கால் நடைகளின் கன்றுகளும், உங்கள் மந்தையின் குட்டிகளும் பெருகும் படி செய்து ஆசி வழங்குவார் என கூறப்பட்டுள்ளது. இறைவனின் ஆசீரோடு இந்த புதிய ஆண்டை நன்றாக திட்டமிட்டு, சிறப்பாக பயன்படுத்தி அனைத்து இடங்களிலும் இறையரசைக் கட்டி எழுப்புவோம். நாம் அனைவரும் ஆண்டவர் தந்த பணிகளில் நம்மையே ஈடுபடுத்தி ஒன்றிணைந்து செயல்படுவோம்.

**My dear people in the Holy Trinity, may God's peace and blessings be with you.**
**Just recently we celebrated Christmas by spreading joy and love around us. At the same time our hearts go towards people who died in the Palestine - Israel war and for all those affected by it. May God of Shalom fill these countries with his everlasting peace. We thank God for the blessings and protection he gave us in 2023. The Holy Trinity has given us this New Year 2024. Let us accept it with gratitude to the Lord. In Deuteronomy 7:13 God says "And I will love you and bless you and multiply you; I will also bless the fruit of your womb and the fruit of your land, your grain and your new wine and your oil, the increase of your cattle and the offspring of your flock, in the land of which I swore to your fathers to give you". Without his blessings no one can do anything. Let us develop a very cordial and intimate relationship with the Triune God daily.**

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

# ஆராரோ ஆரிரரோ

டிசம்பர் மாதம் 16 ஆம் தேதி சனிக்கிழமை நமது பிள்ளைகளுக்கான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. ஆராரோ ஆரிரரோ என்ற தலைப்பில் பல அருமையான கலை நிகழ்வுகள் வழியாக கிறிஸ்துமஸ் பெருவிழாவானது மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டது. மாலை 6.15 மணி முதல் 8.00 மணி வரை நடைபெற்றக் கொண்டாட்டத்தில் அதிகமான மாணவ மாணவிகள் பங்கு பெற்றது சிறப்பாக இருந்தது. அனைத்து நிகழ்வுகளையும் ஒருங்கிணைத்த மறைக்கல்வி குழுவுக்கும், இவர்களுக்கு உதவி செய்த பங்கு பேரவை, அன்பிய சிறுவர்கள் பொறுப்பாளர்கள், சிற்றுண்டி குழுவினர், மற்று பல வகையில் உதவி செய்த அனைவருக்கும், சிறப்பாக பிள்ளைகளை எப்பொழுதும் ஊக்குவிக்கும் பெற்றோர்களுக்கும், இந்நிகழ்ச்சியில் பங்கெடுத்த அனைவருக்கும் நமது பாராட்டும், நன்றியும். கிறிஸ்துமஸ் புத்தாண்டு விடுமுறை முடிந்து மீண்டும் ஜனவரி 7 ஆம் தேதி ஞாயிறு முதல் நமது மறைக்கல்வி ஆரம்பமாகும். எப்பொழுதும் விசுவாச பயிற்சியில் எங்களோடு துணை நிற்கும் பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளை ஞாயிறு மறைக்கல்வி வகுப்பிற்கு ஊக்குவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




**A Christmas celebration was held for the children on Dec 16 (Saturday). The catechism team planned it so well and brought out a creative program to spread the joy of Christmas. A good number of children took part in a lot of interesting activities. Our thanks to the catechism team, BCC children's coordinators, Snacks Committee, Volunteers and encouraging parents for showing a wonderful team spirit. Children were given Christmas gifts and the Chrisma child program was also held. A reminder to the parents is that the catechism classes will again begin from Jan 7, 2024 (Sunday) and children studying upto the 12th standard are welcome.**

---

# கிறிஸ்துமஸ் குடில்




புனித பிரான்சிஸ் அசிசியார் முதன் முதலாக கிறிஸ்துமஸ் குடிலை இத்தாலியில் உள்ள கிரேஜியோ என்கிற ஊரில் 1223 ஆம் வருடம் அமைத்தார். புனித பூமியில் கிடைத்த அனுபவத்தை எல்லோரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிற நல் எண்ணத்தில் தொடங்கப்பட்ட இம்முயற்சி இன்று உலகமெங்கும் உருவாக்கபட்டு வருகிறது. இந்த 2023 ஆம் ஆண்டில் நாம் அமைத்த குடில் 800 ஆவது ஆண்டு குடிலாகும். நமது பங்கு வளாகத்தில் மிகச்சிறப்பாக கிறிஸ்துமஸ் குடில் மற்றும் கிறிஸ்துமஸ் மரம் கடின உழைப்போடு பலரின் ஈடுபாட்டோடும் பொருள் செலவு செய்து சிறப்பாக அமைத்துள்ளனர். குடில் அமைப்பில் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும், இளைஞர் குழுவுக்கும் நமது பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**The first crib was done by St. Francis of Assisi in Greccio, Italy in 1223. The saint wanted to do a live representation of the birth of Jesus and created the first-ever nativity scene in a cave. This is followed all over the world even today. This year we celebrated the 800th year of the nativity scene. A beautiful crib and Christmas tree were set up in our parish by the dedication and involvement of many people. Our youth group had designed another nativity scene inside the church. May God bless all these members and their families for their contribution.**

# திருவருகைக் காலம் மற்றும் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள்

- 03–12–2023 திருவருகைக் கால தொடக்கத்தை முன்னிட்டு, திருவருகைக் கால மலர் வளையம் ஏற்பாடு செய்யப் பட்டது. உதவியவர்களுக்கு நன்றி.
- 8 ஆம் தேதி வெள்ளிக் கிழமை தூய அமல உற்பவி பெருவிழாவை முன்னிட்டு, நண்பகல் 12 மணி முதல் 1.00 மணி வரை இறை இரக்க நேரமாக அனுசரிக்கப்பட்டது. மரியாயின் சேனை உறுப்பினர்களுக்கும், பங்கு பெற்றவர்களுக்கும் நன்றி.
- 8, 9, 10 ஆகிய நாட்களில் திருவருகைக் கால தயாரிப்பு தியானம் அருட் தந்தை ஸ்டீபன் குழுவினரால் நடத்தப்பட்டது. மக்களின் பங்கேற்பு அதிகமாக இருந்தது. உணவு வழங்கியவர்களுக்கு நன்றி.
- 11 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை அன்பியங்களில் கேரல்ஸ் நடத்தப்பட்டது. இதை ஒருங்கிணைத்தவர்களுக்கும், பாடல் குழுவினருக்கும், குடும்பமாய் வரவேற்றவர்களுக்கும் மற்றும் உதவி செய்தவர்களுக்கும் நன்றி.
- 16 ஆம் தேதி சனிக் கிழமை மறைக்கல்வி பிள்ளைகளுக்கான கிறிஸ்துமஸ் கலை நிகழ்வுகள் நடத்தப்பட்டது.
- 17 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 6.30 மணிக்கு புனித வின்சென்ட் தே பவுல் சபையினர் கிறிஸ்துமஸ் கலை நிகழ்வுகளை நடத்தினர். நன்றி.
- 18 தேதி திங்கள் கிழமை மாலை 5 மணி முதல் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கப்பட்டது.
- 21 ஆம் தேதி வியாழக்கிழமை பல கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மற்று மாநகராட்சி அதிகாரிகளை சந்தித்து கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டோம்.
- 21 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை, நமது பங்கிலுள்ள 37 ஏழைக் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசு பொருட்களை பகிர்ந்து கொண்டோம். இதற்காக உதவி செய்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் நன்றியும், செபங்களும்.
- 24 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை இரவு 11 மணிக்கு கிறிஸ்து பிறப்பு பாடல் நிகழ்வும், அதைத் தொடர்ந்து நள்ளிரவு கிறிஸ்துமஸ் பெருவிழா திருப்பலியும் நடைபெற்றது. இரவு திருப்பலியின் பின்னர் தேநீர் மற்றும் கேக் வழங்கப்பட்டது.
- 25 ஆம் தேதி திங்கள் கிழமை காலை 7மணிக்கு கிறிஸ்துமஸ் திருப்பலி ஆங்கிலத்திலும், 8.45 மணிக்கு தமிழிலும் நடைபெற்றது.

---

# ஐரோப்பா பயணம்

எல்லோரும் அறிந்த வண்ணம் நாம் ஏற்பாடு செய்கின்ற ஐரோப்பிய பயணம் மே மாதம் 2024, 5 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் 40 பேர் ஏற்கனவே சேர்ந்து விட்டனர். இதற்கான முதல் கூட்டமும் நமது சமூகக் கூடத்தில் டிசம்பர் மாதம் 10 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இத்திருப்பயணத்தை சிறப்புள்ளதாகும் வகையில் பல நல்ல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஒரு சில சந்தேகங்கள் தீர்க்கப்பட்டன. இத்திருப்பயணம் சிறப்பாக நடைபெற செபிக்கும் படி கேட்டுக்கொள்கிறோம்.

**Our pilgrimage to Europe is planned from May 5 to 20, 2024. Already 40 people have registered. The first meeting regarding this was held on Dec 10, 2023 and many of them shared their views. Let us pray for the success of this pilgrimage.**

# திருக்காட்சிப் பெருவிழா



திருக்காட்சிப் பெருவிழாவை ஜனவரி 7 ஆம் தேதி கொண்டாடுகிறோம். அந்நாளில் மூன்று ஞானிகள் இயேசுவை சந்தித்து வாழ்த்துக் கூறியதை நினைவு கூறும் வகையில் நாம் செபித்து பரிசுப் பொருட்களை பகிர உள்ளோம். இந்த நிகழ்வை முன்னெடுக்கும் அன்பிய பெரியோர் குழுவினருக்கு நன்றி. உங்கள் அன்றாட மன்றாட்டுகளில் நோயாளர்களை நினைவு கூற கேட்டுக் கொள்கிறோம்.

**Just as three wise men followed a star from the East to Bethlehem and offered gifts to Baby Jesus, a group from our parish has planned to visit the elderly people. They will share the joy of Christmas with those confined to their homes due to age related issues. Kindly continue to pray for the sick people in our parish.**

---

## அருள் தந்தை B.K. பிரான்சிஸ் சேவியர்
# நினைவு போட்டி





நமது இளையோர் குழு 2024 ஜனவரி மாதம் 6 மற்றும் 7 தேதிகளில் நமது பங்கு அன்பியங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டிகள் நடத்த இருக்கிறார்கள். நமது திறமைகளை வெளிப்படுத்துவதற்காகவும், தோழமை உணர்வை ஆழப்படுத்துவதற்காகவும், பூப்பந்து, கேரம், செஸ், டென்னிகொய்ட், அன்பியம் நம்பர் 1, மற்றும் இரண்டு நிமிட நாடகம் போன்று பல நிகழ்வுகளை நடத்த திட்டமிட்டுள்ளார். அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தொடர்புக்கு: ஆபிரகாம்: 9566020557, செபாஸ்டியன்: 7200457785.

**Our parish youth group will organise Rev.Fr. BK Francis Xavier Tournament on Jan 6 and 7 for our Basic Christian Communities. Competitions will be held in ball badminton, carrom, chess, tennikoit and two minute short plays. Those interested can contact Abraham 9566020557 or Sebastian 7200457785.**

---

# பொங்கல் விழா

நமது தமிழ் பாரம்பரிய திருநாட்களில் மிகவும் முக்கியமானவை பொங்கல் திருவிழா. இதை நான்கு நாட்கள் கொண்டாடுகிறோம். இந்த நன்றியின் விழாவை இவ்வாண்டு நாம் ஜனவரி 15 ஆம் தேதி, திங்கள் கிழமை அன்று கொண்டாடவிருக்கிறோம். அன்றைய நாளில் அன்பிய பொங்கல், திருப்பலி மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அனைவரும் ஆர்வத்தோடு பொங்கல் விழாவை சிறப்பிக்க அன்புடன் அழைக்கிறோம். நமது இளைஞர் குழு முன்னிருந்து நடத்துவார்கள். அனைத்து குழுக்களும் ஒத்துழைப்பு தரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




**This year our Church's Pongal celebrations will be held on Jan 15 (Monday). Pongal will be prepared by the BCC's followed by mass and culturals organised by the youth group to make it a joyous one. We request all the parishioners to be a part of the Pongal celebrations.**

# கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரம்

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25 ஆம் தேதி புனித பவுலடியாரின் மனமாற்ற விழாவை கொண்டாடுகிறோம். இதை முன்னிட்டு நமது திரு அவையில் ஜனவரி மாதம் 18 ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை கிறிஸ்தவ சபைகள் அனைவரும் ஒன்றிணைந்து வாழ கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரமாக கொண்டாடுகிறோம். கிறிஸ்தவர்களின் ஒன்றிப்புக்காக சிறப்பாக மன்றாடுவோம். ஜனவரி மாதம் 21 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை கிறிஸ்தவ ஒன்றிப்பு ஞாயிறாக சிறப்பிப்போம்.



**Every Year on Jan 25, we celebrate the Feast of St. Paul's Conversion. Having this in mind our Catholic Church celebrates Unity Octave from Jan 18 to 25.Let us pray for the unity of all the Christians. On January 21 (Sunday) we will celebrate Christian Unity Sunday.**

---

## திரு அவையின் பதில்கள் பகுதி–2

நாம் அனைவரும் நமது தாய் திரு அவையின் சரியான நோக்கங்களை தெரிந்து வைப்பது மிகவும் முக்கியமானது. நமது அன்பியங்கள் வழியாக 50 கேள்விகளை நாம் பெற்றிருந்தோம். இதில் முதல் 25 கேள்விகளுக்கு அக்டோபர் மாதம் 29 ஆம் தேதி நான்கு பேராசிரியர்களால் பதில்கள் தரப்பட்டது. மீதமுள்ள 25 கேள்விகளுக்கு வருகின்ற ஜனவரி மாதம் ஞாயிற்றுக் கிழமை 28 ஆம் தேதி காலை 10.30 மணி முதல் நடைபெறவுள்ள அமர்வில் பதில்கள் தரப்படும். அனைவரும் இதில் பங்கேற்று பயன் பெறும்படி அன்புடன் அழைக்கிறோம்.

**It is very important to know the right answers for the questions asked by our Churches. Fifty questions were raised by our parishioners of which 25 were answered by the professors of the Sacred Heart Seminary, Poonamallee on Oct 29, 2023. The remaining will be answered by the professors on Jan 28, 2024. Please take part in this program and enrich your knowledge and faith.**

---

# அரசியல் சாசன நாள்

ஒவ்வொரு நாட்டிற்கும் அரசியல் சாசனம் என்பது இன்றியமையாதது. அரசியல் சாசனத்தினால் மனிதர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. நிர்வாகத்திற்கான கட்டமைப்புத் தரப்படுகிறது. அடிப்படையான சுதந்திரத்தை உறுதிப்படுத்துகிறது. குடிமக்களுடைய உரிமைகளும் கடமைகளும் தெளிவாகச் சொல்லப்படுகிறது. அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையே நம்பிக்கையை வளர்க்கிறது. எனவே நாம் அனைவரும் நமது இந்திய நாட்டின் அரசியல் சாசனத்தை தெரிந்திருக்க வேண்டும். நமது பங்கில் ஜனவரி மாதம் 21 ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணி முதல் 12 மணி வரை இதற்கான விழிப்புணர்வுக் கூட்டம் நடைபெறவுள்ளது. சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராக பணி புரிந்து வரும் அருட்தந்தை ராஜா மணி இதனை நடத்த உள்ளார். அனைவரும் கலந்து கொண்டு விழிப்புணர்வு பெறுவோம்.




**The Constitution generates trust and coordination between the Government and the citizens. It specifies the type of government for a country and how it should function. It lays down the rights and the duties of the citizens. We all need to know at least the basics of our constitution. Keeping this in mind, we are organising an awareness program on Jan 21 (Sunday) by inviting Rev. Fr. Rajamani a lawyer in Madras High Court. This program will take place from 10.30 a.m to 12.00 noon. All are welcome.**

# 2024 JANUARY ஜனவரி 2024

## திருவழிபாட்டு நாட்கள்

01–01–2024 திங்கள்
புனித கன்னி மரியாள் கடவுளின் தாய் – பெருவிழா
எண். 6:22–27, தி.பா. 67: 2–3, 5, 6, 8,
கலா. 4:4–7, லூக்கா . 2: 16–21

07–01–2024 ஞாயிறு
ஆண்டவரின் திருக்காட்சி – பெருவிழா
எசா. 60: 1–6, தி.பா. 72:1–2, 7–8, 10–12,
எபே. 3:2–3, 5–6, மத்தேயு. 2: 1–12

08–01–2024 திங்கள்
ஆண்டவரின் திருமுழுக்கு – விழா
எசா. 55:1–11, எசா. 12: 2–6, 1யோவா. 5: 1–9,
மாற்கு . 1:7–11

14–01–2024 ஞாயிறு
பொதுக்காலத்தின் 2 ஆம் ஞாயிறு
1சாமு. 3: 3–10, 19, தி.பா. 40: 2, 4, 7–10,
1கொரி. 6: 13–15, 17–20, யோவான். 3: 3–10, 19,

21–01–2024 ஞாயிறு
பொதுக்காலத்தின் 3 ஆம் ஞாயிறு
யோனா 3:1–5, 10, தி.பா. 25: 4–9,
1கொரி. 7: 29–31, மாற்கு . 1:14–20

25–01–2024 வியாழன்
திருத்தூதரான புனித பவுலின் மனமாற்றம் விழா
தி.ப. 22: 3–16, தி.பா. 117: 1–2, மாற்கு. 16: 15–18

28–01–2024 ஞாயிறு
பொதுக்காலத்தின் 4 ஆம் ஞாயிறு
இ.ச. 18: 15–20, தி.பா. 95: 1–2, 6–9,
1கொரி. 7: 32–35, மாற்கு. 1: 21–28

## உலக நாட்கள்

ஜனவரி 1 : உலகளாவிய குடும்ப நாள், உலக அமைதி நாள்
ஜனவரி 6 : போர்களில் கைவிடப்பட்டவர்களின் நினைவு நாள்
ஜனவரி 12 : தேசிய இளைஞர்கள் நாள்
ஜனவரி 15 : இராணுவ நாள்
ஜனவரி 24 : தேசிய பெண் குழந்தைகள் நாள்
ஜனவரி 25 : இந்திய சுற்றுலா நாள், தேசிய வாக்காளர் நாள்
ஜனவரி 26 : குடியரசு தின விழா
ஜனவரி 30 : மகாத்மா காந்தி நினைவு நாள்

### நமது பங்கின் டிசம்பர் மாத அருட்சாதன நிகழ்வுகள்

**திருமணம்**

- ஆல்வின் சுதாகர் – கனிமொழி
- பிரவின்தாஸ் – ஷாரா

வாழ்த்துகிறோம்



**இறப்பு**

- நிக்கோலஸ்

மன்றாடுவோம்

## தவக்காலம்

தவக்காலம் அருளின் காலம். இதை இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் தேதி விபூதி புதன் அனுசரிக்க உள்ளோம். இக்காலத்தை சிறப்பாக பயன்படுத்தி, கடவுளுடைய இரக்கத்தினால் மனமாற்றம் பெற்று உயிர்ப்பின் வாழ்க்கைக்கு நம்மையே தகுதியாக்க அனைவரையும் அழைக்கிறோம்.

**This year's lenten season begins on February 14, 2024 (Ash Wednesday). It's the time of God's grace. All are asked to use this season to get closer to God through his mercy and prepare ourselves for the life of resurrection.**

## MARRIAGE PREPARATION COURSE 2024

| Month | Tamil | English |
|---|---|---|
| January | 6th & 7th | 20th & 21st |
| February | 3rd & 4th | |
| March | 2nd & 3rd | 16th & 17th |
| April | 6th & 7th | |
| May | 4th & 5th | |
| June | 1st & 2nd | 15th & 16th |
| July | 6th & 7th | |
| August | 3rd & 4th | |
| September | 7th & 8th | 21st & 22nd |
| October | 5th & 6th | |
| Novemver | 9th & 10th | |
| December | 7th & 8th | |

**ஜனவரி மாத**
**அன்பிய இறைவார்த்தை**
**எண்ணிக்கை 6: 24–26**

## குடும்பங்களுக்கான ஜெபம்

எங்கள் அன்பான தந்தையே! அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதியும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவதன் மூலம், திருக்குடும்பத்தைப் போல ஒன்றிணைந்த மனதுடன் வாழச் செய்தருளும். எமது குடும்பங்களில் அன்பும், அமைதியும், ஒருவருக்கொருவர் உதவும் பண்பும் நாள்தோறும் வளர்வதாக.

ஆண்டவரே! எமது குடும்பங்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். உமது திருக்குடும்பத்தைப் போல, அனைத்துக் குடும்பங்களையும் தூய்மையாக்கும்.

தந்தையே! எமது குடும்ப வாழ்வில் வரும் அனைத்து இன்ப துன்பங்களையும் உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம்.
நாங்கள் ஒவ்வொருவரும், பிறரில் குறை காண்பதை விடுத்து அவர்களது நிறைகளை கண்டுணரவும், பிறரை தூற்றுவதை விடுத்து அவர்களில் பரிவு கொள்ளவும், பிறரிடமிருந்து பெற்றுக் கொள்வதை விடுத்து பிறருக்கு கொடுக்கவும் வரமருளும். இவையனைத்தையும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.



திருவருகைக் கால மலர் வளையத்தை உதவிப் பங்குத்தந்தை ஆசீர்வதித்தார். (03.12.2023)



திருவருகைக்கால அழைப்பிதழை பங்கு மக்கள் ஒருவர் ஒருவரோடு பரிமாறிக் கொண்டனர். (03.12.2023)



திருவருகைக்கால தியானம். (08,09,10.12.2023)




மறைக்கல்வி மாணவர்களின் ஆராரோ ஆரிரரோ கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்வு. (05.11.2023)



பங்கு வளாகத்தில் சிறப்பாக அமைக்கப்பட்ட குடில்.




கடவுளின் கனிகள் என்ற மையக்கருத்தினை வெளிப்படுத்தும் வகையில், இளைஞர்களால் வடிவமைக்கப்பட்ட குடில்.



கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு பங்குத்தந்தை அனைவருக்கும் ஆசி வழங்கினார்.



திருக்குடும்ப விழாவை சிறப்பிக்கும் வகையில் தம்பதியினருக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.




மாசில்லாக் குழந்தைகள் நாளை சிறப்பிக்கும் முகமாக நமது பங்கின் மாசில்லாக் குழந்தைகள். (28.12.2023)


Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery



ROY ENGINEERINGS
ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
FinOlex
PIPES
asianpaints
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE -1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88340
Layout only
Ph No: 044-4851 5365, 044-4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in